

தஞ்சை மத்திய மாவட்ட மாணவர் அணி சார்பில் மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, தலைமையில் நடைபெற்ற மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர்கள் கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷினி மற்றும் கு.வாஞ்சிநாதன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இக்கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம், எம்.இராமசந்திரன், து.செல்வம், கே.டி.மகேஷ்கிருஷ்ணசாமி, தஞ்சை மாநகரச் செயலாளர் மேயர் சண்.இராமநாதன், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் ஆசாத் மகேந்தின், துணை அமைப்பாளர்கள் எஸ்.சதீஷ்குமார், இரா.திருமுருகன், ஜெ.விக்னேஷ், பி.ராஜபிரியா உள்ளிட்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, பகுதி, மற்றும் பேரூர்க் கழகச் செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் மாணவர் அணி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.



விழுப்புரம் தெற்கு மாவட்ட கழக மாணவர் அணி சார்பில் தமிழ் மொழிக்காக இன்னுயிர் நீத்த மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் விழுப்புரம் புதிய பேருந்து நிலையம் அருகில் விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ., தலைமையில் நடைபெற்றது. மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பா.ஸ்ரீவினோத் வரவேற்புரையாற்றினார். நகரச் செயலாளர் இரா.சக்கரை முன்னிலை வகித்தார். தி.மு.க. மாநில கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் தலைவர் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் தலைவர் வாகை.சந்திரசேகர், தலைமை கழகப் பேச்சாளர் அன்னவயல் கணேசன் ஆகியோர் வீரவணக்க நாள் உரையாற்றினார்கள். டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ., இரா.ஜனகராஜ், செ.புஷ்பராஜ், தயா.இளந்திரையன், எம். தேன்மொழி, தமிழ்ச்செல்வி பிரபு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# பதவியை துறந்து தேர்தலை சந்தியுங்கள்! உங்களை தோற்கடிக்க நாங்கள் தயார்!

## ஆளுநர் தமிழிசைக்கு எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா சவால்!

புதுவை, ஜன. 30 - புதுச்சேரியில் தி.மு.க. மாணவர் அணி சார்பில் நடைபெற்ற மொழிப் போர்த் தியாகிகளுக்கான வீரவணக்க நாள் பொதுக் கூட்டத்தில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா பேசியதாவது: -

தமிழ் மொழிக்காக தன் னுயிர் நீத்த தியாக மறவர் களின் வரலாற்றை இன் றைய இளைஞர்கள் அறிந்து கொள்ள வேண் டும். புதுச்சேரி துணை நிலை ஆளுநர் தி.மு.க. கேட்கும் கேள்விகளுக்கு சிரித்துக்கொண்டே வேறு ஒரு பதிலை அளிக்கிறார். ஆனால் நாம் கேட்கும் கேள்விக்கு பதிலிப்ப தில்லை. முதல்வரும் அதே நிலையில் பதில் அளித்தி ருக்கிறார். முதல்வர் பா.ஜ.க.வுக்கு ஆதிரவாக இருக்கிறாரா? அல்லது நடிக்கி றாரா? அவரின் முகம் தெரியவில்லை. தேர் தலுக்கு பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று இருக் கிறாரா? எது எப்படியோ பாராளுமன்றத் தேர்தலில் பாஜக-என்.ஆர் காங்கிரஸ் கூட்டணி தோல்வி உறுதி.

ஜிப்மர் இயக்குநரின் செயல்பாட்டால் ஊழியர் கள், நோயாளிகள் பெரி தும் பாதிக்கப்படுவதை யும், பரிசோதனை மற்றும் சிகிச்சைக்கு கட்டண முறையை கண்டித்தும், இந்தி திணிப்பை எதிர்த் தும், தி.மு.க., காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், கம்யூனிஸ்ட் கட்சிகள் மற் றும் பல்வேறு அமைப்புகள் போராட்டம் நடத்தி னோம். ஆனால் இயக்குந ருக்கு ஆதரவாக ஆளுநர் செயல்பட்டார். சேதுராப் பட்டில் புதுச்சேரி அரசு இலவசமாக கொடுக்கப் பட்ட இடத்தில் ரூ. 500 கோடி மதிப்பில் உறுப்பு மாற்று அறுவை சிகி ச்சைக் கென மருத்துவமனை கட் டும் திட்டத்தை முடக்கி யது மட்டுமல்லாமல், ஜிப் மர் ஊழியர்களுக்கு எதி ரான நடவடிக்கையில் தொடர்ந்து ஈடுபட்டு வரும் ஜிப்மர் இயக்குநரின் பணிகாலத்தை ஒன்றிய அரசு பல்வேறு எதிர்ப்புக ளிடையே இரண்டாது முறையாக நீட்டிப்பு செய் திருப்பது கண்டிக்கத்தக்க தும், ஜிப்மர் விதி 2008க்கு எதிரானதும் ஆகும்.

புதுச்சேரியில் மூடி விட்டு செல்லும் தொழிற் சாலைகள், கூட்டுறவு சர்க் கரை ஆலை, பாரதி, சுதேசி, ஸ்பின்னிங் மில் களை போய் ஆய்வு செய் யுங்கள் என்றால் ஆளுநர் செல்ல மாட்டார். ஜிப்ம ரில் ஒரு பிரச்சினை என்று சொன்னால் முதல் ஆளாய் நின்று பதிலளிப்பதை வாடிக்கையாக கொண் டுள்ளார். ஆகவே, ஜிப்மர் இயக்குநர் இரண்டாவது முறையாக பணிநீட்டிப்பு செய்ததற்கு என்ன கார ணம் என்று ஆளுநர் பதி லளிக்க வேண்டும்.

அண்டை மாநிலமான தமிழகத்தில் கோர விபத்து, தீ விபத்து, நீரில் மூழ்கி இறப்பவர்களுக்கு முதல் வர் நிவாரண நிதி உதவி அளித்து பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆதர வாக இருக்கிறது. அதே நிலையை புதுச்சேரி முதல் வரும் பின்பற்றி கடந்த ஓராண்டில் கடலில் மூழ்கி உயிரிழந்தவர்களுக்கு நிவா ரணம் அளிக்க வேண்டும். சுற்றுலாப் பயணிகளுக்கு தகுந்த பாதுகாப்பு அளிக் கப்பட வேண்டும்.

ஒன்றியத்திலும், மாநி லத்திலும் ஒரே ஆட்சி இருந்தால் அனைத்து திட் டங்களையும் நிறைவேற்ற முடியும் என்று சொல்லி ஆட்சிக்கு வந்த முதல்வர் ரங்கசாமியால், இந்த மூன்று ஆண்டில் யாதாவது ஒரு திட்டத்தை கொண்டு வர முடிந்ததா என்றால் இல்லை. சென்னை - புதுச் சேரி வழியாக நாகப்பட்டி னம் வரை இரயில்வே திட் டம், துறைமுக விரிவாக்கத் திட்டம், சுற்றுலா வளர்ச்சி, நலிவடைந்த மில்களை புனரமைக்க நிதி போன்ற எதையாவது ஒன்றிய அரசி டமிருந்து பெற்றுவந்தாரா என்றால் இல்லை. ஏன் ஒன் றிய நிதிக்குழுவில் புதுச் சேரியை சேர்க்க முயற்சி த் தாரா? புதுச்சேரிக்கான கடனை தள்ளுபடி செய்ய ஒன்றிய அரசிடம் கோரிக்கை வைத்தாரா? இப்படி எதுவும் செய்யா மல் மவுனமாக இருப்பது முதல்வர் பதவிக்கு நல்ல தல்ல.

சின்னஞ்சிறு மாநில மான புதுச்சேரியில் ஒன் றிய அரசு மூலம் நிதி பெற்று பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை செயல் படுத்த துணைநிலை ஆளு நர் முன்வரலாம். ஆனால் அதைவிடுத்து புதுச்சேரி மற்றும் தமிழக அரசிலில் மூக்கை நுழைப்பதை வாடிக்கையாக கொண் டுள்ளார். இதுமட்டுமல்லா மல் மக்களால் தேர்ந்தெ டுக்கப்பட்ட அரசையும் சுதந்திரமாக செயல்பட விடாமல் தடுக்கிறார். அவர் தமிழக பா.ஜ.க. சார் பில் ராதாபுரம், வேளச் சேரி ஆகிய சட்டமன்ற தொகுதிகளிலும், வட சென்னை, தூத்துக்குடி ஆகிய பாராளுமன்ற தொகுதிகள் என நான்கு முறை தேர்தலில் போட்டி யிட்டு டெபாசிட் இழந்த வர். மக்கள் செல்வாக்கு இழந்தவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை முடக்கி, புதுவை யின் அதிகாரம் தனக்கே என கொக்கறிப்பது ஏன்? ஆளுநராக நீங்கள் வந்த பிறகு மக்கள் மகிழ்ச்சியாக இருப்பதாக நீங்கள் நினைத்தால், ஆளுநர் பத வியை ராஜினாமா செய்து விட்டு புதுச்சேரி மக்க ளவை தேர்தலில் போட்டியிட்டு மக்களை சந்தியுங்கள் அப்போது தெரியும் உங்கள் செல் வாக்கு என்ன என்று. தமி ழக மக்கள் தான் புறக்க ணித்து விட்டார்கள். ஆகவே புதுச்சேரி மக்கள் ஒரு மாதிரியாகவும், அரசி யல் வாதிகள் ஒரு மாதிரி யாகவும் இருப்பதையும், முதல்வரும் நமக்கு சாதக மாகத்தான் உள்ளார் என்று நினைத்து, நீங்கள் புதுச் சேரியில் போட்டியிட ஆசைப்பட்டால் உங்களை எதிர்த்து தலைமையின் அனுமதியோடு தி.மு.க. வேட்பாளரை களம் இறக்கி வெற்றி காண்போம். இதை ஆளுநர் அவர்கள் சவாலாகக்கூட எடுத்துக் கொள்ளலாம். ஆளுநர் என்ற பொறுப்பை மறந்து எங்கள் தலைவர்களை விமர்சனம் செய்வதை நிறுத்திவிட்டு, பொறுப்பு மிக்க ஆளுநராக செயல் பட வேண்டும். கடந்த காலங்களில் பல ஆளுநர் கள் புதுச்சேரிக்கு பல்வேறு நன்மைகள் செய்து மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்துச் சென்றுள்ளனர். வெறும் அரசியல் விமர்ச னம் செய்து அவப்பெயர் எடுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அவர் பேசினார்.

### தலைமை: எம்.ஆர்.ஆறுமுகம்!

# ஆம்பூர் நகரில் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## அ.செ.வில்வநாதன் எம்.எல்.ஏ. - கவிஞர் நன்மாறன் - ஈகை தனசேகரன் சிறப்புரை!

ஆம்பூர், ஜன. 30 - ஆம்பூர் நகர தி.மு.க சார் பில் மொழிப்போர் தியாகி கள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் நாகேஸ்வ ரன் ஆலய திடலில் 25.01.2024 அன்று மாலை 7.00 மணியளவில் நடை பெற்றது.

கூட்டத்திற்கு நகர செய லாளர் எம்.ஆர்.ஆறுமுகம் தலைமை வகிக்க, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தே. பிரபாகரன் வரவேற் புரை ஆற்றினார்.

கூட்டத்திற்கு ரபீக் அக மத், தாஸ், ஜி. வில்வநாதன், வி. நசிர் அகமது, எம். நரேஷ்குமார், சாம்செல்ல பாண்டியன், தேவக்குமார், அசோகன், சரண்ராஜ், மு. அப்துல் அலி பர்வேஸ் அக மது, குல்ஜார் அகமது ஆகி யோர் முன்னிலை வகித்த னர்.

அ.செ.வில்வநாதன், எம். எல்.ஏ., தலைமை கழக பேச் சாளர்கள் : கவிஞர். நன்மா றன், ஈகை தனசேகரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வடிவேல் ஆகியோர் சிறப்புரை ஆற்றி னார்கள்.

கூட்டத்தில் அனைத்து அணிகளின் அமைப்பாளர் கள், துணை அமைப்பாளர் கள், நகர கழக நிர்வாகிகள், கிளைக்கழக பொறுப்பா ளர்கள், கழக உடன் பிறப் புக்கள், பொதுமக்கள் பெரு மளவில் கலந்துக்கொண்ட னர்.

கூட்ட முடிவில் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் திருமதி. அம் சவேணி ஜெயக்குமார் நன் றியுரை ஆற்றினார்.




தருமபுரி மேற்கு மாவட்டம் பையர்நத்தம் ஊராட்சியில் நடைபெற்ற கிராமசபை கூட்டத்தில் கழக பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றியச் செயலாளர் பி.எஸ்.சரவணன்,பொதுமக்களிடையே கழக அரசின் நலத்திட்டங்களை பற்றி எடுத்து கூறி சிறப்புரையாற்றினார். உடன் ஊராட்சிமன்றத் தலைவர் சாந்தகுப்புசாமி,மற்றும் கழகத்தினர்,பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# வேடந்தாங்கலுக்கு வெளிநாட்டு பறவைகள் வருகை அதிகரிப்பு!

சென்னை, ஜன. 30 - கண்டம் விட்டு கண்டம் தாண்டி கடல் கடந்து வரும் வெளிநாட்டு பறவைக ளுக்கு வாழ்விடம் ஏற்படுத் திக்கொடுக்க, தமிழகத்தில் 13 இடங்களில் பறவைகள் சரணாலயம் இருக்கின்றன.

அதில், பழமை வாய்ந் தது, செங்கல்பட்டு மாவட் டத்தில் உள்ள வேடந்தாங் கல் பறவைகள் சரணாலயம் ஆகும். சென்னையில் இருந்து 82 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள இந்த சர ணாலயம் 73 ஹெக்டேர் பரப்பளவில் அமைந் துள்ளது.

அந்த வகையில், இந்த ஆண்டு வேடந்தாங்கல் பற வைகள் சரணாலயத்துக்கு நத்தை குத்தி நாரை, சாம் பல் நாரை, கூழைக்கடா, வெள்ளை அரிவாள் மூக் கன், மிளிர் உடல் அரிவாள் மூக்கன், பாம்புத்தாரா, வர்ண நாரை, வக்கா, கரண் டிவாயன், தட்டைவாயன், ஊசிவால் வாத்து உள்பட 32 வகையான பறவைகள் வந்துள்ளன.

ஏரியில் நீர் முழுக் கொள்ளளவான $14\frac{1}{2}$ அடி யில் 14 அடி அளவுக்கு இருப்பதால், தண்ணீர் நிரம்பி காணப்படுகிறது. சுற்றியுள்ள ஏரிகளில் மது ராந்தகம் ஏரியை தவிர மற் றவைகளில் போதுமான அளவு நீர் இருப்பதால், வெளிநாட்டு பறவைகள் குதூகலம் அடைந்துள்ளன.

தற்போது, வேடந்தாங் கல் பறவைகள் சரணாலயத் துக்கு 35 ஆயிரம் வெளிநாட்டு பறவைகள் வந்துள்ளன. ஏரி யில் நீர் நிரம்பி இருப்பது போல், பறவைகளின் கூட் டமும் நிரம்பி வழிகிறது.

### தென்காசி மாவட்டம் - சொக்கம்பட்டி கிராமம் - மஜரா புன்னையாபுரம் அருகே

# மதுரை தேசிய நெடுஞ்சாலையில் சாலை விபத்து - 6 பேர் உயிரிழப்பு!

## குடும்பத்தினருக்கு முதல்வர் ஆறுதல் - நிதியுதவி அறிவிப்பு!

சென்னை, ஜன.30 - தென்காசி மாவட்டம், சொக்கம்பட்டி கிரா மம், மஜரா புன்னையாபுரம் அருகே மதுரை தேசிய நெடுஞ்சாலையில் ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் தெரிவித்து குடும்பத்தினருக்கு நிதியுதவி அளித் துள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்கள் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கை வரு மாறு:-

தென்காசி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், சொக்கம்பட்டி கிராமம், மஜரா புன் னையாபுரத்தில் உள்ள பெரியபாலம் அரு கில் மதுரை தேசிய நெடுஞ்சாலையில் நேற்று (28.1.2024) அதிகாலை சிமெண்ட் ஏற்றி வந்த லாரியும், கார் ஒன்றும் எதிர்பா ராதவிதமாக நேருக்கு நேர் மோதிய விபத் தில், காரில் பயணம் செய்த தென்காசி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், புளியங்குடி கிராமம், பகவதியம்மன் கோவில் தெருவைச் சேர்ந்த போத்திராஜ் (வயது 32), த/பெ. மூக்கையா கோனார், வேல்மனோஜ் (வயது 30), த/பெ.கோபால், சுப்பிரமணியன் (வயது 29), த/பெ.பரமசி வன், கார்த்திக் (வயது 24), த/பெ. பட்ட முத்து, முத்தமிழ்செல்வன் (வயது 23), த/ பெ.ராமமூர்த்தி, மனோ (வயது 19) த/ பெ.மாரிச்சாமி ஆகிய 6 நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்கள் என்ற துய ரகர மான செய்தியை அறிந்து மிகவும் வேதனையடைந்தேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவி னர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை யும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொள் வதோடு, அவர்களது குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச் சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங் கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அவ்வறிவிப்பில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் ஆம்னி பேருந்துகளுக்கு

# கூடுதல் கட்டணம் வசூலிக்கும் இடைத்தரகர்கள் மீது கடும் நடவடிக்கை!

## சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா எச்சரிக்கை!

சென்னை, ஜன. 30 - செங்கல்பட்டு மாவட் டம், கிளாம்பாக்கம் கலை ஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் கடந்த 24.01.2024 அன்று முதல் தென் மாவட்டங்களுக்கு செல்லக்கூடிய ஆம்னி பேருந்துகள் முழுமையாக இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்து முனையத்தில் ஆம்னி பேருந்துகளுக்கு மட் டும் 77 ஆம்னி பேருந்துகள் நிறுத்தும் அளவிற்கு 5 நடை மேடைகளான நடை மேடை எண் : 10, 11, 12, 13 மற்றும் 14 ஆகிய நடைமே டைகளில் ஒதுக்கீடு செய்யப் பட்டு, பயணிகள் சுலபமாக செல்லக்கூடிய வகையில் அனைத்து வசதிகளும் செய் யப்பட்டுள்ளது. இதை தவிர 250 ஆம்னி பேருந்துகள் நிறுத்தும் அளவிற்கு இம்மு னையத்திலேயே இயக்கப்ப டாத பேருந்து நிறுத்துமிடம் (Idle Parking Bay) அமைக்கப் பட்டுள்ளது.

இப்பேருந்து முனை யத் தில் ஆம்னி பேருந்து ஓட்டு நர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதி களும் செய்யப்பட்டுள்ளது. மேலும் இப்பேருந்து முனை யத்தில் ஆம்னி பேருந்துகள் சிறப்பான முறையில் இயக் குவது தொடர்பாகவும் தொடர்ந்து பல்வேறு வித மான தொடர் நடவடிக்கை களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் ஆம்னி பேருந்துகளில் அங்கீகரிக்கப் பட்ட பணியாளர்கள் / முன் பதிவு மையங்கள் தவிர, விதி களுக்கு புறம்பாக இடைத்தரகர்கள் பொதுமக் களிடம் இருந்து கூடுதல் கட் டணம் வசூலிப்பதாக புகார் கள் வரப்பெற்றன. அதனை தொடர்ந்து சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, உத்தரவின் பேரில், நேற்று (27.01.2024) மாலை, கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனைய முதன்மை நிர்வாக அலுவலர்/மாவட்ட வரு வாய் அலுவலர் ஜெ. பார்த் தீபன் , தாம்பரம் வட்டாரப் போக்குவரத்து அலுவலர் யுவராஜ் அனுமதியற்ற முறையில் ஆம்னி பேருந்து கள் டிக்கெட் விற்பனை செய்த நபர்களிடமிருந்து டிக்கெட் புத்தகங்கள் பறிமு தல் செய்யப்பட்டு, எச்ச ரிக்கை விடுக்கப்பட்டு, சம் மந்தப்பட்ட நபர்களை விடுவித்தனர்.

இதனைத் தொடர்ந்து 27.1.2024 அன்று இரவு, முதன்மை நிர்வாக அலுவ லர்/ டிஆர்ஓ ஜெ. பார்த்தீ பன் தலைமையில் ஆம்னி பேருந்து உரிமையாளர் சங்க நிர்வாகிகளுடன் ஆலோச னைக் கூட்டம் நடைபெற் றது. இக்கூட்டத்தில் ஆம்னி பேருந்து உரிமையாளர் சங்க நிர்வாகிகள் தெரிவிக்கை யில், “ஆம்னி பேருந்துகளுக் கான முன்பதிவு ஆன்லைன் மூலமாகவோ அல்லது பிரத் தியேக டிக்கெட் புக்கிங் கவுண்டர்கள் (Online Booking & Ticket Booking Counter) மூல மாகவோ மட்டுமே, டிக் கெட்டுகள் முன்பதிவு கள் செய்யப்படுகிறது, ஆம்னி பேருந்து நிறுவனங்கள் மூல மாக டிக்கெட் புத்தகங்கள் வைத்து பேருந்து நிலையங்க ளிலோ இதுபோன்று முன்ப திவு செய்யப்படுவதில்லை என்றும், அத்தகைய இடைத் தரகர்கள் மீது உரிய நடவ டிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்” எனவும் ஆம்னி பேருந்து உரிமையாளர் சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர். எனவே, கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் ஆம்னி பேருந்துகளுக்கு சட் டவிரோதமாக கூடுதல் விலையில் டிக்கெட் விற் பனை செய்யும் இடைத்தர கர்கள் மீது காவல்துறை மூல மாக குற்றவியல் நடவடிக்கையும் மற்றும் கடு மையான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும் என எச்சரிக்கை விடப்படுகிறது. மேலும் இது தொடர்பாக பயணிகளுக்கு இப்பேருந்து முனையத்தில் ஒலிபெருக்கி மூலமாகவும் தெரிவிக்கப் பட்டு வருகிறது.

### பெரம்பலூர் மாவட்ட மாணவரணி சார்பில்

# மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## குத்தாலம் க. அன்பழகன் - கு.மொழிமாறன் - குன்னம் சி.இராஜேந்திரன் சிறப்புரை!

பெரம்பலூர், ஜன. 30 - பெரம்பலூர் மாவட்ட மாணவரணி சார்பில் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம், தேரடித்திடலில், மாவட்ட மாணவரணி அமைப்பா ளர் தங்க.கமல் தலைமை யில், மாவட்ட மாணவ ரணி துணை அமைப்பாளர் பா.ரினோபாஸ்டின் வர வேற்புரையில், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் இரா கவி ரவிக்குமார், ம.தமிழ் வேந்தன், அ.இளையராஜா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன் தலைமைக் கழகப் பேச்சாளர் கு.மொழிமாறன், மாவட் டக் கழகச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், பெரம்பலூர் சட்ட மன்ற உறுப்பினர் எம். பிர பாகரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி னார்கள். மொழிப்போர்த் தியாகி மூங்கில்பாடி ரெங் கராஜிக்கு மரியாதை செலுத்தப்பட்டது.

இதில் மாநில ஆதிதிரா விடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், மாநில வர்த்தக அணி துணை செயலாளர் வி.எஸ். பெரியசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்தி ரன், பொதுக்குழு உறுப்பி னர்கள் கி.முகுந்தன், பட் டுச்செல்வி ராஜேந்திரன், எஸ். அண்ணாதுரை, மாவட்ட அவைத்தலைவர் அ.நடராஜன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், சன். சம்பத், நூருல்ஹிதா இஸ் மாயில், மாவட்டப் பொரு ளாளர் செ.ரவிச்சந்திரன், ஒன்றிய செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, எம். ராஜ்குமார்,வீ.ஜெகதீசன், எஸ்.நல்லதம்பி, தி.மதியழ கன், சி.ராஜேந்திரன்,

ஒன்றிய பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஹரி பாஸ்கர், துணை அமைப் பாளர்கள் டி.ஆர். சிவசங்கர், அ.அப்துல்கரீம், வ.சுப்ரமணியன், மா.பிர பாகரன், ஆர்.அருண் உள் ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் கிருஷ்ணா.இள. நன்றியு ரையாற்றினார்



புதுக்கோட்டை சேமப்படை மைதானத்தில், 26.01.2024 அன்று நடைபெற்ற குடியரசு தின விழாவில், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, திருமயம் ஊராட்சி ஒன்றியம், மேலப்பனையூர் ஊராட்சிக்கு, தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) முன் மாதிரி கிராம விருதினை (2022– 23) மேலப்பனையூர் ஊராட்சி மன்றத் தலைவர் மேகநாதன் வழங்கினார். உடன் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி மா.செல்வி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.